# கிறித்தவ இலக்கிய வெளியில் மனித மதிப்பீடுகள்

## பன்னாட்டுக் கருத்தரங்கு

தொகுதி - 3




தமிழ் உயராய்வு மையம்

பாத்திமா கல்லூரி (தன்னாட்சி)

மதுரை - 18

# கிறித்தவ இலக்கிய வெளியில் மனித மதிப்பீடுகள்

( பன்னாட்டுக் கருத்தரங்க கட்டுரைகளின் தொகுப்பு )

ISBN: 978-93-87865-06-8

தொகுதி - 3

( 28.9.2018, 29.9.2018 ஆகிய இரு நாட்களில் நடைபெற்ற
பன்னாட்டுக் கருத்தரங்கில் தமிழ்த்துறையினரால் வெளியிடப்பட்டது )

பதிப்பாசிரியர்கள்

முனைவர் **ஆ. பாப்பி கமலா பாய்**, தமிழ்த்துறைத் தலைவர்

முனைவர் **சி. அருள் மைக்கேல் செல்வி**

முனைவர் **இரா. டயானா கிறிஸ்டி**

முனைவர் **இரா. ஏஞ்சல்**

திருமதி **பா. திவ்யா**

திருமதி **டே. ஆனி மரிய ஜான்சி**

வெளியீடு

**தமிழ் உயராய்வு மையம்**

**பாத்திமா கல்லூரி (தன்னாட்சி)**

**மதுரை - 18**

| | | | |
|---|---|---|---|
| 35. | முனைவர் தமிழ்செல்வி, ப. | இயேசுகாவியம்-மலைப்பொழிவில் மனித மதிப்பீடுகள் | 125 |
| 36. | செல்வி தாட்சாயனி, ம. | இயேசுகாவியம் காட்டும் இறைமகனின் அன்பு | 129 |
| 37. | முனைவர். நிர்மலா செல்வி, வே. | இயேசுகாவியம் காட்டும் அன்பு | 132 |
| 38. | முனைவர் பாப்பா, மா | இயேசு காவியத்தில் மனித மாண்புகள் | 136 |
| 39. | முனைவர் சகோ. மங்கள சுந்தரி, க. | எஸ்தர் காவியத்தில் மானுட மதிப்பீடுகள் | 139 |
| 40. | முனைவர் ரில்பர்ட் ஜெனார்த்தனன், வ. | இயேசு காவியத்தில் உவமைகள் ஏற்படுத்தும் கருத்தியல் | 142 |
| 41. | முனைவர் ரேணுகா, நா. | இரவாக் காவியத்தில் மனித மாண்புகள் | 145 |
| 42. | திருமதி ரேவதி, க. | உலகிற்கு வழிகாட்டும் உவமைகள் | 149 |
| 43. | முனைவர் லதா, தா. | அன்னைதெரசா நிகழ்வுகளில் மனிதம் | 152 |
| 44. | செல்வி லட்சுமி பிரியா, லோ. ரா. | சிலுவையின் பாடுகள் வழி "மனிதம்" | 155 |
| 45. | திருமதி ஜான்சி, பா. | கண்ணதாசனின் இயேசுகாவியத்தில் வாழ்வியல் நெறிகள் | 159 |
| 46. | ஜெயசாந்தி, ஜெ. | இயேசு காவியத்தில் மனித மதிப்புகள் | 163 |
| 47. | ஜெயபூர்ணிமா, வே. | சர்வசமய சமரசக் கீர்த்தனையில் முக்தி | 167 |
| | **பிற** | | |
| 48. | முனைவர் பணி. அன்பரசு, ம., சே.ச. | இஸ்லாமிய கிறித்தவச் சமயங்கள் முன்வைக்கும் அறச்சினம் குறித்த பார்வைகள் | 171 |
| 49. | திரு ஆனந்த், பி. | கிறித்தவ வழிபாட்டுப் பாடல்களில் அன்பு | 174 |
| 50. | முனைவர் அருள்தந்தை இருதயராஜ், சே.ச. | ஸ்டெர்லைட் போராட்டத்தில் மனித உரிமை மீறல்கள்; நம்வாழ்வு இதழின் பதிவுகளும் பார்வைகளும் | 177 |
| 51. | திரு. காளிஸ்பிரபு, க. | தமிழ் இலக்கண மரபில் தொன்னூல் விளக்கம் | 182 |
| 52. | திருமதி சத்தியப்பிரியா, பொ. | கிறித்துவம் காட்டும் மனித மதிப்பீடுகள் | 185 |
| 53. | திரு. பால்ராஜ், பி. | கிறித்தவம் வெளிப்படுத்தும் அன்புநெறி | 188 |
| 54. | முனைவர் பூங்கொடி, சு.ர. | வில்லுப்பாட்டில் பெண்களின் மதிப்பீடுகள் | 191 |
| 55. | முனைவர் மோட்ச ஆனந்தன், ம. | கிறித்துவச் சிந்தனையில் அயோத்திதாசப் பண்டிதரும் தந்தை பெரியாரும். | 194 |
| 56. | Dr. V. Suganya | MARIAN VIRTUES IN CONTEMPORARY WORLD | 196 |

# இறவாக் காவியத்தில் மனித மாண்புகள்

முனைவர் நா. ரேணுகா
உதவிப் பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்
பாத்திமா கல்லூரி, மதுரை

இருபதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கிய உலகில் தனக்கென ஓர் இடத்தைத் தக்க வைத்துக் கொண்ட கவிஞர் கண்ணதாசன். இவர் தம் வாழ்நாளின் இறுதியில் படைத்துக் காட்டிய காவியம் தான் இயேசு காவியம். எளிமையும் இனிமையும் மிகுந்த இக்காவியம் பாமர மக்களையும் எளிதில் சென்றடைந்தது. இந்நூலில் இயேசுநாதரின் வாழ்வியலை, அன்பு நிறைந்த வாழ்க்கையைத் தம் கவிவளத்தால் எடுத்துக்காட்டினார். இறைமைந்தனின் வாழ்க்கை வரலாற்றோடு, மனிதராய் வாழ்வதற்குரிய மாண்புகளையும் எடுத்துரைத்துள்ளார் கவிஞர்.

## இறவாக் காவியம்

தமிழன்னைக்குப் புதுக்கவிதை வடிவில் காவியம் படைத்து மகிழ்ந்தவர் கவியரசு கண்ணதாசனார். இறைமகனாரின் வாழ்க்கையைக் கவிதைநடையில் எழுதினார். சமயங்களைக் கடந்து 'அன்பைப் போதித்த' அண்ணலின் வாழ்வைப் படைத்துக் காட்டினார். திருவிவிலிய நூலின் காவிய வடிவமே 'இயேசு காவியமாய்' மலர்ந்தது. இந்நூலை அருள்திரு ஜார்ஜ், ஜே.பி. தனிஸ்லாஜ் ஆகியோரின் வேண்டுகோளுக்கிணங்க கண்ணதாசன் இயற்றினார். குற்றாலத்தின் இயற்கை அழகில் கண்ணதாசன் இயற்றிய காவியச் சாரல் தான் 'இயேசு காவியம்' என்றுரைப்பர். இந்நூலைக் குறித்து,

"பலர் என்னை இறவாக் காவியம் ஒன்று எழுதுங்கள் என்று வற்புறுத்தியதுண்டு, அந்த இறவாக் காவியம் இயேசு காவியம் தான் என்று உறுதியாகக் கூற முடியும்" என்று கண்ணதாசன் அவர்கள் குறிப்பிடுகிறார்.

## அருளுருவாய்த் தோன்றினார்

இயேசுநாதரின் மாட்சிமையை நூலின் தொடக்கத்திலிருந்தே காட்டுகிறார். அவரது மாட்சிமையை உணர்த்துகின்ற போது அன்னாரது அருளையும் உண்மை வாழ்வையும் எடுத்துரைத்துள்ளார். பகைவருக்கும் அருளுகின்ற பண்புடையாளனின் வாழ்வியலை யதார்த்தமாக விளக்கியுள்ளார்.

**"வாக்கு மலர்ந்து மனுவுரு ஆனார்**
**நாதன் மனுவாய் நம்மிடை வாழ்ந்தார்**
**அவரது மாட்சியை அனைவரும் கண்டோம்**
**அருளும் உண்மையும் அவராய் விளங்கினார்"**

அன்றைய சமூகத்தில் பெண்களுக்கு மதிப்பில்லாத நிலையே இருந்தது. இச்சூழலைக் கண்டித்தும் மாற்றியும், தவறிழைத்த பெண்களை மன்னித்தும், நோயுற்ற பெண்களைக் குணமாக்கியும் அருளினார் இயேசுநாதர். இச் செய்தியைக் கண்ணதாசன் பலவிடங்களில் கவிநயத்துடன் தம் காவியத்தில் அமைத்துள்ளார்.

பரிசேயன் வீட்டில் மாசுடையவளான பாவி மகள் இயேசுவின் பாதங்களைக் கழுவினாள். இக்காட்சியைப் பரிசேயன் ஏளனமாகப் பார்த்தான். இதனை உணர்நத இயேசுநாதர் அவனது குற்றத்தையும் அவளது (பாவி மகளின்) செயலையும்,

**"தண்ணீரால் கழுவாமல் நீர்**
**தள்ளிய பாதம் தன்னைக்**
**கண்ணீரால் கழுவினாள் அவள்"**

என்று உரைக்கிறார். மனம் திருந்திய பெண்களுக்கு வாழ்வளித்து அருளினார். பாவிகளை மீட்பதற்காகத் தோன்றிய இயேசுநாதரின் செயல்பாடுகள் மனிதநேயத்தின் உயிர்நாடியாகும். பாவிமகளாக இருந்தாலும்